அருள்மிகு

# பூவராக சுவாமி திருக்கோயில்

ஸ்ரீ முஷ்ணம்



# தல வரலாறு

இறை பணியில் என்றும் :

**V. குமார் ரெட்டியார்,**

S/o. N. வெங்கட்ராயல் ரெட்டியார்

கீழ்கவரப்பட்டு - 607 112. தெ. ஆ. மா.

---

அணுக வேண்டிய முகவரி :

75, சின்ன சுப்பராயப்பிள்ளை வீதி,

பாண்டிச்சேரி - 605 001. Ⓒ 39141

## ஸ்ரீ பூவராகன்



தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோர் அமிததேஜஸ: ।
ப்ரணமம் ஏபிகுர்வந்தி தேஷாமபி நமோநம: ॥



ஸ்ரீ யக்ஞவராகன்



தங்ககருடசேவை

# நன்றி

ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராக சுவாமி திருக்கோயில் தல வரலாறு புத்தகம் 1000 பிரதிகள் நன்கொடையாக கொடுத்த தெ. ஆ. மா., கீழ்கவரப்பட்டு, V. குமார் ரெட்டியார் அவர்களுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியும், அம்புஜவல்லி சமேத ஸ்ரீபூவராக சுவாமி மேலும் மேலும் அருள்புரிய வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

**P. சந்திரசேகர்,** M.A., B.Ed.,
செயல் அலுவலர்

தலவரலாறு இரண்டாம் பதிப்பாக 1979-ம் ஆண்டு K. நடராஜ், M.A., செயல் அலுவலரால் போடப்பட்டு, பின் தற்போது 1993-ம் ஆண்டு சில மாறுதல் விஷயங்களை சரி பார்த்து தற்போதைய நிர்வாக அதிகாரி திரு. P. சந்திரசேகரன், M.A., B.Ed., அவர்களால் மூன்றும் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டது.

# முன்னுரை

நமது புண்ணிய பாரத பூமியில் வேறுபட்ட பல சமயங்கள் பன்னெடுங்காலமாக நிலவி வருகின்றன எனினும், பாரத மக்களுக்-கென்று தனியானதொரு பண்பு என்றும் இருந்து வருகிறது. அவ்-வப்போது பல வேறு காரணங்களால் சமயப் பொதுநோக்கிற்கு இடையூறுகள் ஏற்பட்ட போதும், பொதுவாக சமயவாதிகளிடையே அன்பு நெறியும் உண்மையான பக்தி. நெறியும் தொடர்ந்து போற்றப் -பட்டு வந்திருப்பதைப் பார்க்கிறோம் சைவம், வைஷ்ணவம், சாக்தம் முதலான வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் தத்தம் மதக்கோட்-பாடுகளை அவரவர்களுக்கு ஏற்பட்ட மரபுப்படி நடந்துவர வேண்டிய-துடன் பிற சமயத்தவர்களின் நெறிகளையும் முறைகளையும் மதிக்க வேண்டியது அவசியம் என்பதை நம் முன்னோர்கள் போற்றிவந்துள்ள-னர். இன்றும் இந்த நிலை பின்பற்றப்பட்டு வருகிறதென்பதற்கு ஸ்ரீமுஷ்ணம் பூவராகப் பெருமானுக்கு வழிபாடாற்றுவதில் வைணவர்கள் மட்டுமின்றி மாத்வரும் சைவரும் இஸ்லாமியரும் கூட இன்றும் பங்கு பெறுவது சான்றாகும்.

ஸ்ரீ பூவராகப் பெருமான் அவதரித்த ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தில் பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோவில் தலவரலாறு ஒன்றை எழுதி வெளியிடவேண்டுமென்று கோவில் நிர்வாகிகள் பணித்ததன் பேரில் இந்நூல் சுருங்கிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

'வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே' என்று நம்மாழ்வாரால் போற்றப் பெற்ற பூவராகப் பெருமாளின் அவதாரம், ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தின் பெருமை, தீர்த்தங்களின் சிறப்பு, திருக்-

கோவிலிலுள்ள சன்னதிகள், உத்சவங்கள், கல்வெட்டுச் செய்திகள் ஆகியவை சுருக்கமாக இந்நூலில் தரப்பட்டுள்ளன.

இந்நூலை எழுதுவதில் 1930 ஆம் ஆண்டில் திருவையாற்றில் ஸ்ரீதாததேசிகாசார்யர் அவர்களால் தேவநாகரியில் அச்சிட்டு வெளியிடப் பெற்ற 'ஸ்ரீமுஷ்ண மாகாத்ம்யம்' என்ற நூலும், 1973ஆம் ஆண்டில் விருத்தாசலம் வக்கீல் திரு R. ஸ்ரீநிவாஸராகவாசார்யர் அவர்களால் தமிழில் எழுதி வெளியிடப்பட்ட 'ஸ்ரீமுஷ்ண மாகாத்ம்யம்' என்ற நூலும் பெரிதும் உபயோகமாக இருந்தன. இவ்விரண்டுள் முந்தைய நூலில் ஸ்ரீநாரதீய புராணத்திலும் ஸ்ரீவராஹ புராணத்திலும் கூறப்படும் ஸ்ரீமுஷ்ண மாகாத்ம்யப் பகுதிகள் அடங்கியுள்ளன. இவையன்றி வராஹோபநிஷத், T. A. கோபிநாதராவ் அவர்களின் Elements of HinduIconography, ஸ்ரீமுஷ்ணம் கோவில் கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்புகள் ஆகியவையும் ஆங்காங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை

பெ. திருஞானசம்பந்தன்

# மதிப்புரை

ஆரியர்களான நாம் வைதீக கருமங்கள் நிகழ்த்தும் போது சங்கற்பம் செய்துகொள்ளுகையில் "ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரத-கண்டே" என்று சொல்லித் தொடங்குகிறோம். இதனால் நமது நாட்டின் புனிதத்தன்மையை நினைத்துக்கொள்கிறபடி பெரியாழ்வார் ஒருபதிகம் தொடங்கும்போது நாவலம் பெரிய தீவினில் வாழும் என்-கிறார். பராசரமுனிவர் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் 'காயந்தி தேவர் சில கீதகாநி தந்யாஸ்துயே பாரதபூமிடாகே' என்கிற சுலோகத்தினால் நமது பாரதபூமியின் சிறப்பை அற்புதமாக வெளியிட்டுள்ளார். நமது நாடு தவிரப் பிறநாடுகளில் [ச்வீபாந்தரங்களில்] ஜனித்தவர்களோ வாழ்பவர்களோ நல்வினை தீவினைகளின் பயனை அனுபவிக்கலாமேயன்றி, புதிதாக ஒரு புண்ணியத்தையும் இயற்ற அதிகாரிகளல்லர் என்பது தேர்ந்த கருத்து வேதம், வேதாங்கம், முதலிய புனித நூல்களும் அவற்றை ஓதுபவர்களும் இந்நாட்டில் மட்டுமே அநாதிகாலமாக விளங்கி வருகிறார்கள். நம்முடைய வழிபாட்டுக்குரிய ஆலயங்களும் இந்த நாட்டில்தான் நமது புத்திக்கெட்டாத காலந்தொடங்கி மேன்மை பெற்று வருகின்றன. பகவான்தான் சோதியாய் திறந்து ஸம்பவாமி யுகே யுகே என்று அருளியபடி அவ்வப்போதுகளில் செய்தருளும் மத்ஸ்ட கூர்ம வராஹாதி அவதாரங்களும் இந்த நாட்டிலேதான் ஆயின; ஆகின்றன. அத்தகைய அவதாரங்களுள் ஸ்ரீவராஹாவதாரம் மிகச்-சிறந்ததென்பதை கைசிக புராணத்தை வியாக்கியானம் செய்தருளும் ஸ்ரீ பராசரபட்டர் அவதாரிகையில் பரக்கப் பேசியுள்ளார். நாம் உய்வ-தற்கான வழிகளை ஸ்ரீ ராமபிரான் ஸக்ருதேவ ப்ரபந்நாய என்கிற சரம சுலோகத்தினாலும், கண்ணபிரான் ஸர்வதர்மாந் பரித்யதிய என்கிற சரம சுலோகத்தினாலும் காட்டியருளியிருந்தாலும், இவர்களுக்கு முன்னே ஸ்ரீ வராஹப்பெருமான் இரண்டு சுலோகங்களினால் காட்டியிருப்பது மிக அற்புதம் ஸ்திதே மனஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி போ நர; தாது-ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மரம் அஜம் ததஸ் தம் ம்ரியமரணம் து காஷ்டபாஷாணஸந்நிபம், அஹம் ஸ்மராமி மத்பக்தம்

நயாமி பரமாட் கதிம். என்னுமிந்த வராஹ சரமச்சுலோகங்கள் எம்பெருமானுக்கு நம்மீதுள்ள அளவுகடந்த அன்பையும் அருளையும் வெளியிடுகின்றன. நம்முடைய உடல்நிலை தளராதிருக்கையில் நாம் எம்பெருமான் தன்னைச் சிறிது ஸ்மரித்தால்பின்பு அப்பெருமான் தான் நமக்குச் செய்தருளும் சேமங்கள் இதில் பரக்கப் பேசப்பட்டுள்ளன. நாம் ஸ்மரிக்கவேணுமென்று சொல்லிவைத்த பெருமான்தானே கீதையில் '' மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம் அபோஹநஞ் ச '' என்றும் சொல்லி வைத்தனன். அப்பெருமான் செய்விக்கும் செயலை நாம் தடை செய்யாதிருக்க வேணுமென்பது பரம தாற்பரியம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் தமது திருமொழியில் பாசி தூர்த்துக் கிடந்த உயிர் மகட்கு—பன்றியாந்தே சுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பார்கள் பேர்க்கவும் பேராவே என்னும் பாசுரத்தினால் இந்த வராஹசரமச் சலோகத்தின் ஒப்புயர்வற்ற பெருமையை விளக்கியருளினமை காண்க.

ஆழ்வார்களுக்கு வராஹகப் பெருமானிடத்திலுள்ள அபிநிவேசத்தை ஆராயுங்கால் அது இலக்ஷணமாகத் தெரியவருகின்றது. நம்மாழ்வர் தமது ப்ரதமபிரபந்தமான திருவிருத்தத்தில் பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம், நம்மேலொருங்கே பிறழவைத்தார் என்னும் பாசுரத்தினால்வராஹப் பெருமானுடைய கடாக்ஷ விசேஷமே தமது நன்மைகளுக்கெல்லாம் மூலகந்தமென்று பேசி, அதன் முடிவிலும் வையம் முற்றும் ஏனத் துருவாயிடந்த ஞானப்பிரானை யல்லாலில்லை நான்கண்டநல்லதுவே என்று பேசியருளினர். சரமப் பிரபந்தமான திருவாய்மொழியைத் தலைக்கட்டுமிடத்தும் கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்ட வேந்தாய்! - உன்னைப்பெற்றினிப் போக்குவனோ? என்றருளிச் செய்தார். பெரியாழ்வாரும் எயிற்றிடை மண் கொண்ட வேந்தை இராப்பகலோதுவித்து என்னைப் பயிற்றிப் பணி செய்யக் கொண்டான் என்றருளிச்செய்தார். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் முகப்பிலேயே பன்றியாயன்று பாரகங் தீண்ட பாழியானாழி யானருளே, நன்று நானுய்ய நான்கண்டு கொண்டேன் என்றருளியது மிக மேம்பட்டது. இவ்வாறாக ஞானப்பிரான் பாக்கலில்

ஆழ்வார்களுக்குள்ள ஈடுபாட்டைப் பன்னியுரைக்குங்காற்பாரதமாம். வராஹப்பெருமான் திகழாத திவ்யதேசமே கிடையாதென்பது ஸாரமான வார்த்தை. எங்கும் இவரே க்ஷேத்ராதிபதியாவர்.

இதர க்ஷேத்ரங்களில் ஸேவை ஸாதிப்பதுபோல் அல்லாமல் தமக்கே அஸாதாரணமான க்ஷேத்திரமாகக் கொண்டவிடம் ஸ்ரீமுஷ்ணமென்னும் மஹா க்ஷேத்திரமாகும். இது ஸ்வயம்வயக்த க்ஷேத்ரங்களுள் தலைமைபெற்றதாகக் குலாவப்படுகின்றது. இந்த மஹா க்ஷேத்திரத்தின் மான்மியம் வடமொழிப் புராணமாகவுள்ளது. தமிழிலும் சிலரால் எழுதப்பட்டுள்ளதாம். அவ்விரு நூல்களையும் தழுவி உயர்திரு V. திருஞானசம்பந்தரவர்கள் மிகத்தெளிவான எளிய நடையில் எழுதியுள்ள ஸ்ரீமுஷ்ணத் தல வரலாறு எனது பார்வைக்கு வந்தது. க்ஷேத்திர வைபவம் அனைவர்க்கும் எளிதாகத் தெரியும் வண்ணம் மிக அழகிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் பக்த பாகவதோத்தமர்கட்குப் பேருதவிபுரியுமென்பது எனது நம்பிக்கை.

இங்ஙனம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்



# தியான ச்லோகம்

ஓம் ! ஸ்வேதம் வராஹவபுஷம் க்ஷிதிமுத்தரந்தம்
ஸங்காரிஸர்வ வரதாபய யுக்த பாஹும்
த்யாயேந் நிஜைஸ்ச தநுபி : ஸகலைருபேதம்
பூர்ணம் விபும் ஸகல வாஞ்சித ஸித்தயேऽஜம்

இது தியான ச்லோகம். பூமியைத்தூக்கி அபயமளித்த வராகப் பெருமான் சங்கு, சக்கரங்களை தரித்து, பூர்ண அபய முத்திரை காட்டி அருளி பரிபூர்ண, பரம் பொருள், ஸகலவித மனோரதங்களையும் பூர்த்தி செய்து வைக்கிறான்.

வானத் தெழுந்தமழை முகில்போல் எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
எனத்துருவாய் கிடந்த இம் மண்ணினை
தானத்தே வைத்தானால் இன்று முற்றும்
தரணி இடந்தானால் இன்று முற்றும்.

— பெரியாழ்வார் திருமொழி 3 ப. 3 தி. 7 பாசு.

## க்ஷேத்ரம்

ஸ்ரீவராஹ புராணத்தில் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தைப்பற்றி சொல்லப்-பட்டவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

க்ஷேத்ரம் என்றால் என்ன? அதன் பயன் என்ன? அது எத்தனை வகை? அங்கே பூசிக்கப்படுகின்றவர் யார்? பூசித்தால் எதைத் தருகிறார்? இக்கேள்விகளை பூமிதேவியே கேட்க எம்பெருமான் ஹரி சொல்கின்றார்.

‘எந்த ஒரு இடத்தில் பாபங்கள் போக்கப்பட்டு ஜனங்கள் காக்-கப்படுகின்றனரோ அந்த இடத்திற்கு க்ஷேத்ரம் என்று பெயர். ஒரு க்ஷேத்ரத்தின் பெருமை அங்கு வாழ்ந்த மகான்களின் தபோபலத்தைச் சார்ந்தது. க்ஷேத்ரம் நான்கு வகைப்படும். அவை தேவக்ஷேத்ரம், சித்த க்ஷேத்ரம், ஆர்ஷக்ஷேத்ரம், மானுஷக்ஷேத்ரம் என்பவை. தேவர்களின் தவத்தால் பெருமையுற்றது தேவக்ஷேத்ரம். அங்குள்ளோருக்கு பரப்பிரும்ம ஞானம் கிட்டுகிறது. எந்த க்ஷேத்ரத்தில் முக்தி சித்திக்கிறதோ அது சித்தக்ஷேத்ரம் எனப்படும். ரிஷிகளின் தவத்தால் புகழ் பெற்றது ஆர்ஷக்ஷேத்ரம் எனப்படும். மனிதர்கள் செய்த நற்கருமங்-களால் கீர்த்தி வாய்ந்தது மானுஷ க்ஷேத்ரம் எனப்படும். பாவங்கள்

கழிவதற்கேற்றது இது. தேவர்களாலும், சித்தர்களாலும், ரிஷிகளாலும், மனிதர்களாலும் தோற்றுவிக்கப்பட்ட வி மா ன ங் க ள் (கோவில்கள்) முறையே அவ்வப் பெயர்களால் வழங்கப்படுகின்றன. தேவ விமானத் -திற்கு இரண்டு யோஜனை தூரம் க்ஷேத்ரம் எனப்படும். அங்குள்ளோ -ருக்கு போகமும் மோக்ஷமும் உண்டு. சித்த க்ஷேத்திரத்தின் எல்லை ஒரு யோஜனை தூரம். ஆர்ஷ க்ஷேத்ரத்தின் எல்லை இரண்டு குரோசம் மானுஷ க்ஷேத்ர எல்லை ஒரு குரோசம். இந்த நால்வகை க்ஷேத்ரங்-களுக்கு மேலாக ஐந்தாவதாக உள்ளது ஸ்வயம் வயக்த க்ஷேத்ரம் எனப்படுவது.

——o0o——

## ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரம்

ஸ்வயம்வயக்த க்ஷேத்ரம் என்பது யாராலும் தோற்றுவிக்கப்-படாமல் அனாதியே இருந்து வரும் தலம். அதில் உள்ள மூர்த்தி இரண்டு வகைப்படும். ஒன்று தேவர்களால் மட்டுமே காணத்தக்கது. அதுவே சிதானந்த ரூபம். மற்றொன்று கோவில்களில் காணப்படும் பிம்ப ரூபம். இது மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப் பெறுவது. ஸ்வயம் வயக்த க்ஷேத்திரங்கள் 108 என்று வராஹ புராணம் கூறுகிறது. அவற்றுள் ஸ்ரீமுஷ்ணம், வேங்கடாத்ரி, ஸ்ரீரங்கம், கும்ப -கோணம், அனந்தசயனம், அகோபிலம், நரநாராயணம், துவாரகை, மதுரா, ஜனார்த்தனம் முதலானவை அடங்கும். நதிகளுக்குள் கங்கை எப்படி முக்கியமானதோ அப்படி க்ஷேத்ரங்களுக்குள் ஸ்ரீமுஷ்ணம் முக்கியம் என்று ஸ்ரீமுஷ்ண மாகாத்மியம் கூறும். இந்த 108 க்ஷேத்ரங்-களுள்ளும் எட்டு மிக முக்கியமானவை. அவை ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீரங்கம், வேங்கடாத்ரி, அஹோபிலம், நரநாராயணம், சாளகிராமகிரி, புரு-ஷோத்தமம், தோதாத்ரி என்பவை. இங்கெல்லாம் பூஜை செய்கின்றவர் பிரம்மா; துதிபாடுகின்றவள் சரஸ்வதி : இவற்றை ஏற்றுக் கொண்டு போக மூர்த்தியாக இருப்பவர் ஸ்ரீதேவி பூதேவியோடு கூடிய லக்ஷமி-காந்தன். ஸ்ரீமுஷ்ணத்தில் எல்லா தீர்த்தங்களும் சேர்கின்றன. எல்லா

தேவதைகளும் கூடுகின்றனர். சுவேதவராஹனின் சேவையின் பொருட்டு ரிஷிகளும் வேதவிற்பன்னர்களும் என்றும் வசிக்கின்றனர். அத்தகைய புண்ய க்ஷேத்ரத்தை ஒரு முறை பார்த்தாலே முக்தி அடையலாம், விஷ்ணுவின் பரமபதத்தைச் சேரலாம் என்று வராஹ புராணத்தில் அடங்கிய ஸ்ரீமுஷ்ண மாகாத்மியப் பகுதி கூறுகிறது.

ஹிரண்ய கசிபுவின் புத்திரனுன பிரஹலாதன் ஸ்ரீமுஷ்ணத்தில் எழுந்தருளியுள்ள வராகப்பெருமானின் அருளுக்குப் பாத்திரனுகி, பக்தர்களுக்குள்ளே முதன்மையானவனுக வாழ்ந்து, பிறகு நரசிம்ம அவதாரத்தின்போது நரசிம்மரை தியானித்து சாயுஜ்யம் அடைந்தார் என்று கூறப்படுகிறது.

கடலினின்றும் பூமியை மேலே கொணர்ந்ததன் மூலம் தேவர்களுடைய துயரைத் துடைத்து அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றியவுடன் வைகுண்டத்திற்கு திரும்பிச்செல்ல பெருமான் எண்ணியதாகவும், பூதேவி தன்னிடமே தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டதன் பேரில் பூமி மேலே கொண்டுவரப்பட்ட இடமாகிய ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தில் எம்பெருமான் வாசம் செய்யத் தொடங்கினுர் என்றும் நாரதபுராணம் கூறும். பூதேவியோடு கூடி வசிப்பதால் வராகப் பெருமானுக்கு பூவராகன் என்று பெயர். 'வராகனுக' பாவித்து பூஜிக்கின்றவருக்கு பிரம்மலோகமும், 'பூவராகனுக' பூதேவியோடு சேர்த்து பாவித்து பூஜிக்கின்றவருக்கு மேலான சாயுஜ்ய முக்தியே கிடைக்கும் என்று பெருமான் அருளியதாக வராக புராணம் கூறும். தான் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தில் தங்கியபோது தன் பரிவாரங்களையும் அங்கேயே தங்கச் செய்தார். சங்கு தீர்த்தத்தில் சங்கும், அக்னி தீர்த்தத்தில் அக்னியும், பிரம்ம தீர்த்தத்தில் பிரம்மாவும், பார்கவ தீர்த்தத்தில் கருடனும், கோபுரத்தில் வாயுவும், பலிபீடத்தில் ஆதிசேஷனும், வாயிற்படியில் விஷ்வக்சேனரும் இவ்வாருக அவரவர்களுக்கு உரிய இடத்தை நியமித்து கடமைகளையும் விதித்தார். எடுத்துக்காட்டாக பகவானை சேவிப்பவர்களை யமதூதர்கள் அணுகாமல் காக்கவேண்டியது ஆதிசேஷன் கடமை. பகவானை நினைந்து தினம் வழிபடுவோரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லவேண்டியது இந்திரன் கடமை. பாபம் செய்பவர்களை

தண்டிப்பது ஆயுதம் தாங்கிய கந்தர்வர் கடமை. ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரம் பிரம்மாதி யோகிகளுக்கு வேதாத்யயன பூமியாகவும், தேவர்களுக்கு யாக பூமியாகவும், மனிதர்களுக்கு மோக்ஷ பூமியாகவும் இருந்து வருகிறது. இங்கு எழுந்தருளியிருக்கின்ற வராகப்பிரான் மாந்தர்களின் இறுதிக்காலத்தில் கருடாழ்வாராகிய குருவைக் கொண்டு பிரம்மோபதேசம் செய்வித்து முக்திபெறச் செய்கின்றான். ஸ்ரீமுஷ்ணத்தில் உயிர் நீத்தோர் பாபங்கள் அனைத்தினின்றும் விடுபட்டு விஷ்ணுவின் பரமபதத்தை அடைவர். ஏகாதசியில் பட்டினிகிடந்து இரவு கண்விழித்து துவாதசி விடியற்காலை எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோரைப்புல் பொடியையும் அரிசிப்பொறி மாவையும் தேனையும் கலந்து அதை பெருமானுக்கு நிவேதித்து பின்பு உண்பவர் எழுபிறப்பில் ஈட்டிய பாபங்களினின்றும் விடுபடுவர்.

பூமி பிராட்டியை ஸ்ரீவேதாந்த தேசிகன் சரணாகதி அடைகிறார். ஒரு சுலோகத்தில் அவள் பெருமையைப் போற்றுகிறார், 'எண்ணியவற்றை ஈந்தருளும் கல்பலதையாகவும், பொறுமைக்கோர் எல்லையாக-வும், எளிவந்த கருணை உடையவளாகவும், உலகத் தாயாராகவும், காமதேனுவை விஞ்சுகின்றவளாகவும், எல்லாவற்றையும் தாங்குகின்றவளாகவும் உள்ள வராக மஹிஷியே, உன்னை சரண் அடைகின்றேன்'.

ஸங்கல்ப கல்ப லதிகா மவதிம் க்ஷமாயா
ஸ்வேச்சா வராஹமஹிஷீம் ஸுலபானுகம்பாம் !
விச்வஸ்ய மாதர மகிஞ்சன காமதேனும்
விச்வம் பராமசரண; சரணம் பிரபத்யே !

திருமழிசை ஆழ்வார் நம் நெஞ்சங்களுக்கு அறிவுறுத்துகிறார்.

ஈனமாய எட்டும் நீக்கி ஏதமின்றி மீது போய்
வானமாள வல்லையேல் வணங்கி வாழ்த்து என் நெஞ்சமே !
ஞானமாகி ஞாயிறாகி ஞாலமுற்றும் ஓரெயிற்று
ஏனமாயிடந்த மூர்த்தி எந்தை பாதமெண்ணியே

# 5

மகா வாக்ய ரத்னவளீ என்ற நூலில் உபநிஷத்துக்கள் 108 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று வராஹோபநிஷத் என்பதாகும். உபநிஷத்துக்கள் பெரும்பாலும் பிரம்ம வித்தையைக் கூறுவன. உபநிஷத் என்ற சொல் ‘குருவின் அருகிலிருந்து அஞ்ஞானத்தை அழித்து மெய்ஞானத்தை உணர்த்தும் உபதேசம்’ என்று பொருள்படும். அந்த வகையில் ரிபு என்ற முனிவர் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் புரிந்து பஹவானை வராஹரூபத்தில் கண்டு அவரிடம் உபதேசம் பெருகிறுர். இது வராஹோபநிஷத் என்று பெயர் பெறுகிறது. வராஹ பஹவான் தந்த உபதேசங்களுள் சிலவற்றைக் காண்போம்.

‘தத்துவங்கள் இருபத்து நான்கென்பார் சிலர்; முப்பத்தாறு என்பார் வேறு சிலர்; தொண்ணூற்ருறு என்பார் பின்னும் சிலர். இந்த தத்துவங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிற்கும் என்னை எவர் பக்தி-யுடன் வழிபடுகின்ருர்களோ அவர்கள் ஜீவன் முக்தர்கள் ஆவர். என்னுடைய சச்சிதானந்த சொரூபத்தை அறிந்தவர்களுக்கு கர்மபந்தம் இல்லை. ஜீவாத்மா பரமாத்மாவுடன் வாசம் செய்வதுதான் ‘உபவாசம்’ எனப்படும். உடலைப் பட்டினிபோட்டு வறுத்துவதொன்றே உபவாசம் ஆகாது. யான் எனது என்ற பற்றற்ற நிலையே முக்திநிலை. சத்குருவின் கருணையின்றி புறப்பொருள்மீது பற்றின்மையோ மெய்யறிவு காண்டலோ ஏற்படாது. சங்கீதம், தாளம், லயம், வாத்யம் ஆகியவற்றில் ஈடு பட்டிருந்தபோதிலும் எப்படி நாட்டியமாடுகிறவள் தன் தலைமீதுள்ள கரகத்தை விழாமல் காப்பதில் கவனமாக இருப்பாளோ, அப்படி யோகியானவன் உலக விஷயங்களால் தாக்குண்டபோதும் பிரம்ம சிந்தையை சிதற விடமாட்டான். விருப்பு, வெறுப்புகளாலோ கோபதா-பங்களாலோ பாதிக்கப்படாதவன் ஜீவன்முக்தன். யோகாப்பியாச முறை-யிலும் ஜீவன் முக்திநிலையை அடையலாம். ஜீவன்முக்தர்கள் இடை-யருது விஷ்ணுவின் பரமபதத்தையே கண்டிருப்பார்கள்.

——o0o——

## அன்னதானச் சிறப்பு

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது சங்க-காலக் கூற்று. அன்னம் பாலித்தல் தர்மங்களுள் தலைசிறந்தது. அது முக்தியையும் தரவல்லது என்பதை உணர்த்துகிறது. ஸ்ரீமுஷ்ண மாகாத்-மியத்தில் கூறப்பட்டுள்ள சம்பரன் வரலாறு

சம்பரன் என்றொரு ஏழைப் பிராமணன் ஸ்ரீமுஷ்ணத்தில் வசித்து வந்தான். அவன் தினந்தோறும் பத்து கிராமங்களுக்குச் சென்று யாசகம் செய்து குடும்பத்தை நடத்தியதுடன் எஞ்சிய பொருளைக் கொண்டு அன்னதானம் செய்து வந்தான். ஒருநாள் இரவு, பக்தனை சோதனை செய்யும் பொருட்டு மகாவிஷ்ணு சிம்மத்துடன் ஒரு கிழ பிராம்மண வடிவம் தாங்கி வந்தார். அவருக்கு பக்தர் உணவு படைத்தார். இன்னும் பசிக்கிறது என்றார் வந்தவர். வீட்டிலுள்ள சாமான்களையும் விற்று அரிசி முதலியவற்றை வாங்கிச் சமைத்து மீண்டும் படைத்தார். பசித்திருந்த சிம்மமும் பிராமணர் ஹோமதிரவி-யத்திற்காக வளர்த்துவந்த பசுவை அடித்துச் சாப்பிட இருந்தது. பக்தர் பசுவிற்குப் பதிலாக தன்னையே தர இசைந்தார். கேவலம் ஒரு மனிதமாமிசம் தன் பசிக்குப் போதாது என்றது சிம்மம். தன் மனைவி-யையும் புதல்வனையும் சேர்த்து உணவாக அளிப்பதாகச் சொன்னார். புண்டரீகாக்ஷன விஷ்ணுபகவான் அவருடைய பக்தித்திறத்தைக் கண்டு வியந்து கருடாழ்வாருடனும் மற்ற பரிவாரங்களுடனும் காட்சி தந்தார். வேண்டியதைக் கேட்கும்படி பணித்தார். அதற்கு அந்த பக்தர் 'சுவர்க்கமும் வேண்டேன் குறையாத பக்தியுடன் தங்களுக்கு என்றும் தாசனாக இருக்கவும் தங்கள் திருவடி மறவாதிருக்கவும் அருள வேண்டும்' என்று வேண்டினார். எனினும் பகவான் அவரைச் சிலகாலம் சுவர்க்கத்தில் இருந்து, பிறகு பூமியில் சிபிச்சக்கரவர்த்தி-யாகப் பிறந்து கீர்த்தியுடன் விளங்கி பின்னர் முக்தியின்பத்தைப் பெறுமாறு பணித்து மறைந்தார். ஆகவே ஸ்ரீமுஷ்ணத்தில் அன்ன-தானம் செய்பவர் விஷ்ணுலோகத்தில் பல்லாண்டு வாழ்வர் என்று கூறப்பட்டுள்ளது.

ரதோத்சவம்: முன்பொரு காலத்தில் பகுபிரஸ்தன் என்று ஒருவன் இருந்தான். அவன் உழவுத்தொழிலேயும் வியாபாரத்தையும் நடத்தி வந்தான். பெரும் பொருளை ஈட்டிய போதிலும், தன் சுக-போகத்திற்கோ புகழுக்கோ தர்மத்திற்கோ எதற்கும் பொருளைச் செலவு செய்யமாட்டான். ஈத்துவக்கும் இன்பத்தை அறியாதவன். தனக்கோ தன் மனைவிமக்களுக்குக் கூட செலவு செய்யமாட்டான். பிறருக்கு கொடுப்பதுபற்றி சொல்லவா வேண்டும்? உண்டு உடுத்துவதோடு சரி. பாவ புண்ணியங்களை அறியமாட்டான். வட்டிக்கு கடன்கூட கொடுக்கமாட்டான். இப்படி லோபியாக வாழ்ந்து வந்தவனுக்கு பத்மபந்து என்ற அந்தணனுடைய சந்திப்பு நேர்ந்தது. பத்மபந்து சாஸ்திரங்களைப் பயின்றவன். தரும நெறியில் நிற்பவன் பகவானின் திருவடித்தாமரை-யையே பற்றுக்கோடாகக் கொண்டவன். ஆண்டுதோறும் வசந்த காலத்தில் வேள்வி செய்து வருபவன். தக்க சமயத்தில் பத்மபந்து பகுபிரஸ்தனுக்கு உபதேசம் செய்தான். மனைவி, மக்கள், மனை, பொருள், தான்யம், போகம் முதலியவை எல்லாம் தர்மத்தினுலே அமைகின்றன. சுவர்க்கமும் தர்மத்தினுல்தான் சித்திக்கும். சரீரம் நிலையற்றது. எப்போதாயினும் கூற்றுவன் வருவான். ஆகவே உயிர்க்கு உய்தி தரவல்ல தருமநெறியில் வாழ்வாயாக' என்று கூறினுன். தருமம் செய்யும் வழிகளைக் கேட்ட அவனுக்கு, 'கிணறு, குளம், ஏரி, முதலி-யவற்றைத் தோண்டி அமைத்தல், நந்தவனம், மண்டபம் ஆகியவற்றை நிறுவுதல், சரண்புகுந்தவருக்கு உதவுதல், அன்னமிடுதல், தண்ணீர்ப்-பந்தல் அமைத்தல் ஆகியவை எல்லோருக்கும் பொதுவான தர்மங்கள். இவையன்றி மகாதர்மங்கள் என்று சொல்லக்கூடியவை சில உண்டு. தீயவர்களை தண்டித்தல், வேதசாஸ்திர பிரச்சாரம், ஆலய வழிபாடு, சமய அறிவைப் பெறுதல், விஷ்ணுபக்தி, வைராக்யம், நல்லோரிணக்கம் ஆகியவை அவை. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல். கணந்தோறும் தேய்ந்து கொண்டே போவது இவ்வுடல். உடல் நல்ல நிலையில் இருக்கும்போதே தருமத்தைச் செய்யவேண்டும்.'

பகுபிரஸ்தன் இதுகாறும் காலத்தை வீணே போக்கியதை உணர்ந்தான். வருந்தினுன். எந்த க்ஷேத்திரத்தில் எந்த வகையான தர்மத்தைச் செய்யலாம் என்று வினவினுன் மனத்துக்கண்மாசிலனுகிய

பகுபிரஸ்தன். பத்மபந்து கூறினர் —'காவேரிக்கு வடபால், கீழ்கடலுக்கு மேற்கே இரண்டு யோசனை தூரத்தில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் மகாக்ஷேத் -ரம் இருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்தை எண்ணினுலே எல்லா பாபங் -களிலிருந்தும் விடுபடலாம். விஷ்ணுலோகத்திற்கும் செல்லலாம். அங்கே பலவகை தானங்களை செய். அங்கே வராஹ ரூபத்தில் விஷ்ணு காட்சி தருகிருர். அவருடைய ஆலயத்தில் தீபம் ஏற்றிவை ரதோத்சவத்தைச் செய்,' என்று. பகுபிரஸ்தனும் தன் வீட்டிற்குச் சென்று மனைவி மக்களோடு கலந்தாலோசித்தான். பிறகு ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்திற்குச் சென்று நித்ய புஷ்கரணியில் நீராடி, தண்டகாசுரனை ஒடுக்கி அங்கே எழுந்தருளியுள்ள ஸ்ரீ வராஹப்பெருமானை சேவித்து தனம், தான்யம், பசு. நிலம் முதலியவற்றைத் தக்கவருக்கு தானம் செய்தான். வராஹப் பெருமானுக்கு ரதம் ஒன்றை செய்வித்து ரதோத்சவம் ஆண்டுதோறும் நடைபெறுவதற்காக ஒரு கிராமத்தை விலைக்கு வாங்கி அளித்தான். சூரியன் மேஷ ராசிக்குச் சென்ற பின்னர் பூச நட்க்ஷத்திரத்தில் துவஜாரோகணம் செய்து நவராத்திரி உற்சவம் செய்தான். விசாக நட்க்ஷத்திரத்தில் தீர்த்தவாரி நடத்தி முக்தி அடைந்தான். அடுத்த கல்பத்தில் பிரயவிரதன் என்ற பெயரில் சுவாயம்புவ மனுவின் முதல் புத்திரனுகப் பிறந்தான். ஏழு கடல்களால் சூழப்பட்ட உலகத்தின் ஏக சக்ராதிபதியாகப் பல்லாண்டு பல்லாண்டு ஆட்சிபுரிந்தான் என்று நாரதபுராணம் கூறுகிறது.

ஜபமகிமை : காஷ்மீர தேசத்தில் கமடன் என்று ஒர் அந்தணன் இருந்தான். பாபச் செயல்கள் பல புரிந்தவன். உறவினர் -களாலும் ஒதுக்கப்பட்டான். ஊர் ஊராகத்திரிந்தான். ஸ்ரீமுஷ்ணத் -திற்கு வந்து சேர்ந்தான். ஒரு பண்டிதர் துவாதசாக்ஷர மந்திரத்தின் பெருமையைச் சொல்லிக்கொண்டிருந்தார். இம் மந்திரத்தை ஜபித்தால் பாபங்கள் அனைத்தும் போய்விடும் என்பதைக் கேட்ட உடன் தன் தந்தை ஒரு சமயம் தனக்கு உபதேசித்த இம்மந்திரம் நினைவிற்கு வந்தது. இந்த சத்சங்கத்திஞலே இவன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. நித்யபுஷ்கரணிக்கு நேரே சென்ருன். நீராடினன். அசுவத்த மரத்தடியில் அமர்ந்தான். மந்திர ஜபத்தைத் தொடங்கினன். ஐயாயிரம் முறை ஜபித்தான். தெவயோகத்திஞலே உடலிலிருந்து உயிர் பிரிந்தது.

யமதூதர்கள் வந்தார்கள் கருடாழ்வாரும் வந்தார். யமதூதர்களைத் தடுத்து நிறுத்தினர். அவன் முன்பு செய்த பாபங்களுக்காக நரகத் -திற்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதாகக் கூறினர். ஆனால் எந்த பாபியும் விஷ்ணுபக்தனாக இருந்தால் அவனை யமதூதர்கள் அணுகக் கூடாது என்பதை கருடாழ்வார் நினைவூட்டினர். கருடாழ்வாரால் பிரம்மோபதேசம் செய்யப் பெற்று, கமடன் வைகுண்டத்திற்கு அழைத் -துச் செல்லப் பட்டான். துவாதசாக்ஷர மந்திர மகிமை இவ்வாறு நாரத புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. தீர்த்த மகிமை ஸ்ரீவராக புராணத்தில் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்திலுள்ள தீர்த்தங்களின் மகிமை இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

'நித்யபுஷ்கரணியின் கரையில் பசு, அன்னம், பொன் ஆகிய -வற்றின் தானம் சிறப்புடையவை ஸ்ரீ வராகப் பெருமானைப் பூஜிப்ப -தற்கும் வேதபாராயணம் செய்வதற்கும் ஏற்றது இவ்விடம் நித்யபுஷ் -கரணியில் நீராடுதல், ஸ்ரீ வராகப் பெருமானை தரிசனம் செய்தல், கீதை -யைப் படித்தல் இவை ஒவ்வொன்றும் முக்தியை அளிக்க வல்லவை.

இதன் கீழ்ப்பகுதியில் லக்ஷ்மீநாராயணஸரஸ் என்ற தீர்த்தம் உள்ளது. கன்யாதானம் செய்வதற்குச் சிறந்த இடம். இங்கே பிரத்யும் -னர் பூஜைக்குரியவர். இங்கே மூழ்கி, கிருஷ்ண மந்திரத்தை ஜபித்தால் போகம் மோக்ஷம் இரண்டும் கிட்டும்.

கோவிலுக்கு அக்னிதிசையில் பூமிதீர்த்தம் உள்ளது. இங்கு பூதானம் சிறப்புடையது. பூவராகர் வழிபடுதெய்வம். வராகமந்திர ஜபம் செய்யும் இடம். வீடுபேறு பலன்.

அதற்கு கிழக்கே சக்ரதீர்த்தம் இங்கே ஹரி இந்திரனால் ஆரா -திக்கப்பெற்றான். திலதானம் சிறப்புடையது. ஹரி பூஜிக்கப்படும் இடம். சுதர்சன மந்திரம் ஜபிப்பதற்கேற்றது. பிறப்பிறப்பு வாதனை ஒழியும்.

அதற்கும் கிழக்கே இருப்பது பிரம்மதீர்த்தம். இங்கே பூஜிக் கப்படுகின்றவர் ஜனார்த்தனன். பொன்தானம், வித்யாதானம் இரண்டும்

சிறப்புடையவை. குருவாரத்தில் சஹஸ்ரநாம ஜபம் செய்தால் பாபங்கள் அனைத்தும் போக்கப்பெற்று முக்தியை அடைவது உறுதி.

அதற்கும் கிழக்கே **அக்கினிதீர்த்தம்.** பார்கவ ராமர் பூஜைக்குரியவர். திலதானம் பாத்திரதானம் சிறப்புடையவை. இங்கே நீராடி விஷ்ணுசூக்தம் ஜபித்தால் பாபங்களினின்றும் விடுபெற்று ஹரியை அடையலாம்.

**வேணுதீர்த்தம்** காசிகண்டத்திலுள்ள ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தி-லுள்ள இத்தீர்த்தத்தைப் பற்றிய வரலாறு ஸ்ரீ தாத தேசிகா சார்யரால் வெளியிடப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ண மாகாத்மயம் என்ற நூலின் பிற்சேர்-க்கையினின்றும் எடுத்துத்தரப்படுகிறது இது மாத்வர்களால் போற்றப்ப-டுகிறது. தண்டதீர்த்தம் என்றும் இதைக் கூறுவர். இது க்ஷேத்ரத்திற்கு மேற்கே உள்ளது.

வாயுபகவானின் அவதாரமாகப் போற்றப்படுகிற ஆனந்ததீர்த்தர் என்ற யதி காசி, பிரயாகை, நைமிசம் தோதாத்ரி, வேங்கடாசலம், காஞ்சி, விருத்தகிரி ஆகிய திவ்யஸ்தலங்களை தரிசித்துவிட்டு ஸ்ரீமுஷ்ணம் வந்து சேர்ந்தார். நித்யபுஷ்கரணியில் நீராடி, வராஹ-மந்திரம் ஜபித்து, அரசு வலம்வந்து வராகப்பெருமானை தரிசித்து பிச்சைக்காக வீதியில் செல்லும்போது காந்திமதி என்ற அம்மையார் தன் கணவர் வெளியூர் சென்றிருப்பதாகவும் பிச்சைக்கு வேண்டிய பொருள் எல்லாம் இருந்தும் தான் கர்ப்பிணியாக இருப்பதால் தூரத்தில் உள்ள குளத்திலிருந்து குடிநீர் கொண்டுவர இயலாத நிலையில் இருப்-பதைக் கூறி வருந்தினாள். உடனே யதியானவர் தன் மூங்கில் தடியினால் பூமியைத் தோண்டி குளத்தை ஏற்படுத்தினார். அதிலேயே நீராடி பிச்சையைப் பெற்றுக்கொண்டு நீர் பருகி ஒரு வரத்தை அருளினார். மாசிமாத சுக்லபக்ஷ நவமியில் பௌமவாரத்தில் சூரியோ-தயத்தில் இத் தீர்த்தத்தில் நீராடுவோர் தேவர்களாவார்கள்.'

**மிருத்யுஞ்சய தீர்த்தம்** இது தீமூலையில் உள்ளது. முன் ஒரு சமயம் கருடாழ்வார் அமிருதகலசத்தை எடுத்துக்கொண்டு வந்த

போது ஒருமலையில் கலசத்தை வைத்துவிட்டு சற்று இளைப்பாரியதாகவும், அப்போது அக்கலசத்தினின்று சிந்திய சில அமிர்தத்துளிகள் அங்குள்ள குளத்தில் சேர்ந்து குளம் புனிதத் தன்மை பெற்றுவிட்டதாகவும், இதில் நீராடினால் ஆயுள் பெருகுமென்றும் மத்வஸ்ரீமுஷ்ண புராணத்தில் கூறப்பட்டுள்ளது. மத்வமதத்தினருக்கு இது புனிதமான தீர்த்தம்.

## பூவராஹப்பெருமான் அவதாரம்

பிரம்மா சுவாயம்புவ மனுவிடம் சகல உயிர்வருக்கங்களையும் படைக்குமாறு பணித்தான். அவர், உயிர்கள் வாழ்வதற்கேற்றதான பூமி கடலில் மூழ்கிக்கிடப்பதால் அதை மேலே கொண்டுவர முயலுமாறு கேட்டுக்கொண்டார். பிரம்மா நாராயணனை தியானம் செய்தார். அப்போது பிரம்மாவின் மூக்கின் வழியே கட்டைவிரல் அளவுள்ள ஒரு பன்றிக்குட்டி வெளியே வந்தது. பிறகு வானளாவும் பெரிய உருவத்தில் காட்சியளித்தது. தேவர்கள் வராஹப்பெருமானைத் துதி செய்து பூமியை மீட்டுத்தருமாறு வேண்டினர். பெருமானும் தன் மோப்ப சக்தியால் பூமி இருக்குமிடத்தை அறிந்து குபீரென கடல் நீருக்குள் மூழ்கினான். தன் கோரைப் பற்களால் பூமியைத் தூக்க முயன்றபோது அதை தன் வசத்தே வைத்திருந்த அசுரர் தலைவனான ஹிரண்யாக்ஷன் சதையை எடுத்துக்கொண்டு வந்து எம்பெருமானை எதிர்த்தான். அவனை எளிதில் கொன்று பூமியை தன் கோரைப் பற்களில் ஏந்தி நின்றான் பகவான். தேவர்களும் ரிஷிகளும் அவனை யக்ஞ வராகனாக வழிபட்டு உயிர்வருக்கங்கள் உறைந்து வாழ்வதற்கு பூமியை உரிய இடத்தில் நிலைபெறச் செய்யுமாறு வேண்டினர். பூவராகனும் அங்ஙனமே செய்தான் என்று கூறுகிறது ஸ்ரீ பாகவதம்.

இவ்வருளிச்செயலை திருமங்கை ஆழ்வாரும்—

சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கண் குன்றம்
　　திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி,
இலங்குபுவி மடந்தைதனை இடந்துபுல்கி
　　எயிற்றிடைவைத் தருளியஎம் மீசன்காண்மின் !

என்று பெரியதிருமொழியில் பரவியுள்ளார்.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த தசாவதார ஸ்தோத்ரத்-தில் இவ்வவதாரத்தை பின்வருமாறு போற்றுகிறுர்.

மகாப் பிரளய காலத்தில் கரைபுரண்டு பொங்கியெழும் சமுத்-திரத்தின் அலேகளின் ஓசைபோல் குர் குர் என்று மூக்கிலிருந்து உண்டா-கும் உரத்த ஓசைகளால் இவ்வுலகம் அனைத்தையும் பரிசுத்தமாக்கின பன்றியாய் அவதரித்த பகவான் எல்லா உலகங்களேயும் எப்போதும் காப்பாற்றக் கடவர். மகிமை பொருந்திய இந்த பூதேவி, அந்த வராகப் பெருமானின் கோரைப் பல்லின் நுனியில் ஒரு கோரைக் கிழங்குபோல் கெட்டியாக அசைவற்று இருத்தப்பட்டு நான் முகன் என்னும் ஒரு புல்முளேயை உண்டாக்கினுள். அளப்பரிய பெருமை வாய்ந்த இந்த பூமி வராகப் பெருமானின் பல்நுனியில் தங்கியிருந்தாள் என்ருல் அத்-திருவுருவத்தின் பெருமை சொல்லுந்தரமோ' என்று வியந்து போற்று-கிறுர் கீழ்க்கண்ட சுலோகத்தில்—

கோபாயேத் அநிசம் ஜகந்தி குஹநா போத்ரீ பவித்ரீ க்ருத
ப்ரஹ்மாண்ட: ப்ரளயோர்மிகோஷ குருபிர் கோணரவை: குர்குரை:
மத் தம்ஷட்ராங்குர கோடி-காட-கடநா-நிஷ்கம்ப-நித்யஸ்திதி:
ப்ரஹ்ம ஸ்தம்ப மஸௌத் அஸௌ பகவதீமுஸ்தேவ் விச்வம் பரா.

பிரம்மாவின் உடலிலிருந்து சிருஷ்டி காலத்தில் தோன்றியவன் ஹிரண்யாக்ஷன். பூமியை ஆதாரமற்றதாக ஹிரண்யாக்ஷன் படைத்த-தால் அது சமுத்ரத்தில் ஆழ்ந்துவிட்டது என்றும், தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நீலமேகவண்ணனுன பத்மநாபன் வராக உருக்-கொண்டு ஹிரண்யாக்ஷனைக்கொன்று பூமியை மேலே கொணர்ந்து நிலைநிறுத்தினுன் என்றும், அப்படி நிலைபெறச் செய்த இடம்தான் பூவராக க்ஷேத்ரமான ஸ்ரீமுஷ்ணம் என்றும் நாரதீய புராணம் கூறுகிறது. அங்குள்ள நித்ய புஷ்கரணியின் கரையில் உள்ள அசுவத்த மரத்தடியில் இருந்து கொண்டு வராகப் பெருமான் தேவர்களுக்கு வேள்வியைச் செய்துகொண்டும் வேதாத்யயனம் செய்வித்தும் வந்தான் என்றும் கூறப்படுகிறது. ஆகவே அவனை யக்ஞவராகன் என்றும் அழைப்பார்-கள். அவனே யக்ஞமாகவும், யக்ஞரூபமாகவும், யக்ஞாங்கமாகவும் யக்ஞத்தை புசிப்பவனுகவும், யக்ஞேசுவரனுகவும், யக்ஞபலத்தைத்

தருவோனாகவும், யக்ஞார்க்பனாகவும், யக்ஞத்திற்குரியவனாகவும், ஸ்ரீவராகமந்திரம் கூறுகிறது.

வாயுபுராணம் வராகப்பெருமானின் திருமேனியை யக்ஞமாக உருவகித்து யக்ஞத்தின் உறுப்புகளை வராகத்தின் உறுப்புகளில் பொருத்திக் காண்பிக்கிறது.

'வராகத்தின் நான்கு பாதங்களும் நான்கு வேதங்கள்; அது எழுப்புகின்ற குர் குர் என்ற ஒலியே சாமகோஷம்; தந்தம் யூபஸ்-தம்பம்; நா வேள்வித்தீ, உடலின் ரோமங்கள் தர்ப்பைப் புற்கள்; இரு கண்களும் பகலும் இரவும் ஆவன; காதணிகள் வேதாங்கங்கள்; உமிழ்-நீர் நெய்; மூக்கு, சுருவம் என்னும் கரண்டி; முழங்கால் பசு; குளம்பு பிராயச்சித்தம்; எலும்பு மந்திரங்கள்; ரத்தம் சோமரசம்; இழுத்து அவிஸ்; பிராணன் அந்தராத்மா; இதயம் தக்ஷிணை; சாயை பத்னி; தலை பிரம்மன்; குடல் உத்காதா, குறி ஹோதா; சரீரம் யக்ஞசாலை; நடை ஹவ்பகவயம்' என்பனவாம்.

'அளவற்ற தேஜசுடன் கூடி யக்ஞவராகன் என்ற பெயரை உடைய விஷ்ணுவை எவர்கள் வணங்குகிறார்களோ அவர்களுக்கெல்லாம் வணக்கம், என்று பீஷ்மர் பகவானைத் தோத்திரம் செய்வதாக மகா-பாரத சாந்தி பர்வத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகைப் படைத்தற் பொருட்டு கடலினடியே கிடந்த பூமியை மேலே கொண்டுவருவதற்காக யக்ஞபுருஷனே பன்றி உருவம் தாங்கி பூமியை மேலே கொண்டுவந்ததாக ஸ்ரீபாகவதம் கூறுகிறது.

தொடக்க காலத்தில் எங்கும் நீர் நிறைந்திருந்ததாகவும் ஸ்வயம்-பூவாகிற பிரமன் பன்றி உருக்கொண்டு பூமியை மேலே கொண்டு-வந்ததாக இராமாயணம் கூறும்.

நூறுகைகளைக் கொண்ட கரும்பன்றி (கிருஷ்ணவராகம்) நீரினின்று பூமியை மேலே கொண்டுவந்ததாக யஜுர்வேத தைத்தரீய ஆரண்யகம் கூறுகிறது.

யக்ஞவராஹன் திருவுருவம் வெண்மையானது. நான்கு கை-களோடு கூடியது. இருகைகள் சங்குசக்கரம் ஏந்தியவை. மற்ருென்று ஆசனத்தின்மீதும் பிரிதொன்று தொங்கிக்கொண்டும் இருக்கும். பீதாம்-பரம் உடுத்தி சுகாசனத்தில் வீற்றிருப்பார். வலப்புறம் லக்ஷ்மியும் இடதுபுறம் பூதேவியும் சார்ந்திருப்பர்.

கர்நாடக தேசத்தில் பேலூர் சென்னகேசவர் கோவிலில் பன்னி-ருகைகளோடு கூடிய வராகப்பெருமான் காட்சிதருகிருர். வலதுபுறம் ஆறுகைகளில் சூலம், அங்குசம், மணி, கத்தி, சக்கரம்; பாணம்; ஆகியவை உள்ளன. இடதுபுறத்தில் கேடயம், சங்கு, எலுமிச்சை ஆகியவையும், ஒருகை வியப்புக்குறியைக் காட்டுவதாகவும் ஒருகை தேவியை அணைத்தும் காணப்படுகின்றன. அசுரர்கள் மீது ஊன்றிய பாதங்கள் முன்புறம் பூதேவி.

மகாபலிபுறத்திலுள்ள வராகப்பெருமான் திருவுருவம் பிர-சித்தமானது.

பிரளய வராஹன் என்ற உருவில் அமைந்த பிரான் சிம்மா-சனத்தில் வீற்றிருப்பார். வலதுபாதம் தொங்க இடதுபாதம் மடிக்கப்-பெற்று ஆசனத்தின்மீது அமைந்திருக்கும். நான்கு திருக்கரங்களுள் இரண்டு சங்கு சக்கரங்களை ஏந்தியும், ஒன்று அபயஹஸ்தமாகவும் மற்ருென்று இடது தொடையின்மீது பொருந்தியும் காணப்பெறும். நீலமேனியன் பீதாம்பரதாரி வலதுபுறம் நீலோத்பல மலரை ஒருகையில் ஏந்தியும், மற்றொரு கையை ஆசனத்தின்மீது வைத்தும் வியப்புடன் நோக்கும் பூதேவி.

## கோவில் மூர்த்திகளும் சன்னிதிகளும்

கோவிலின் முக்கிய சன்னிதி ஸ்ரீ பூவராகசுவாமி சன்னிதி. சுவாமி மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிருர். முகம் மட்டும் தெற்கு நோக்கி உள்ளது. அசுரர்களை வென்றதால் ஏற்பட்ட வெற்றிப் பெருமித உணர்ச்சி பொங்க இரு கைகளையும்

இடுப்பில் வைத்துக்கொண்டு முகத்தை நிமிர்த்தி கம்பீரமாகப் பார்க்கிறார். மூலவர் சாளக்ராம மூர்த்தி. மேலே உள்ள விமானம் சிதானந்த விமானம் என்று கூறப்படும் ஸ்வயம் வியக்த விமானம். பகவத் சங்கல்பத்தால் தோன்றியது. பிரம்மா வாணியின் துணை கொண்டு அங்கு பெருமானுக்கு பூஜை செய்கிறார். நாம் காணும் விமானம் கட்டப்பட்ட பிராகிருத விமானம். மனிதர்கள் வழிபடுவதற்குரியது. முன்னையது அழிவற்றது. பின்னையது அவ்வக்காலங்களில் சிதிலமடைந்தும் புதுப்பிக்கப்பட்டும் வருவது.

கருவறைக்கு முன்பு மேற்புறம் அர்த்த மண்டபத்தில் உற்சவர் யக்ஞ வராகமூர்த்தி ஸ்ரீதேவி பூதேவியருடன் மேற்கு நோக்கி காட்சி தருகின்றார். உடன் ஆதிவராக மூர்த்தியும் கண்ணனும் எழுந்தருளியுள்ளனர். ஸ்ரீ அம்புஜவல்லித்தாயாரின் வேண்டுகோளுக் கிணங்கி அழகுவாய்ந்த கல்யாணத் திருக்கோலத்தில் எழுந்தருளியதாக புராண வரலாறு.

இதன்முன் உள்ள மகாமண்டபத்தில் போகநாராயணர் உபயநாச்சியார்களுடன் காட்சி தருகின்றார்.

பிரதான மூர்த்தியின் பிரகாரத்திற்கு அடுத்துள்ள பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஸ்ரீ அம்புஜவல்லித்தாயார் சன்னிதியும் அதன் முன் ஊஞ்சல் உற்சவ மண்டபமும் அமைந்துள்ளன. இச்சன்னிதியில் மூலவருக்கு முன் உற்சவர் அம்புஜவல்லித்தாயார் காணப்படுகிறார்.

இதே பிரகாரத்தில் மேற்கு கோபுரவாசலின் உட்புறத்தில், வாசலின் கீழ்புறம் கோபுரத்தின் முதல்நிலையில் ஸ்ரீ வராகப்பெருமானை நோக்கி, கிழக்கே பார்த்திருக்கும் ஸ்ரீநிவாசப் பெருமான் சன்னிதி உள்ளது. மூலவரைத் தரிசிக்கும் முன்பு ஸ்ரீநிவாசப்பெருமானையும் அடிவாரத்தில் அமைந்துள்ள அவர் திருவடிகளையும் தரிசித்துச் செல்வது வழக்கம்.

இப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஸ்ரீ ஆண்டாள் சன்னிதி அமைந்துள்ளது. அடுத்து உடையவர் சன்னிதியும் அங்கு உள்ளது.

இப்பிரகாரத்தின் வடபுறம் வேணுகோபாலன் சன்னிதியும் அடுத்து விஷ்வக்சேனர் சன்னிதியும் உள்ளன.

பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கி அமைந்திருப்பது ஸ்ரீ வேதாந்த தேசிகன் சன்னிதி, ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த தசாவதாரஸ்தோத்ரம், ரஹஸ்ய சிகாமணி, பூஸ்துதி, தமிழ் பிரபந்தம் ஆகியவற்றுள் வராகப்பெருமானிடம் அவருக்குள்ள ஈடுபாட்டைக் காணலாம்.

இதே பிரகாரத்தில் திருமங்கைமன்னன், மணவாளமாமுனிகள், திருக்கச்சிநம்பி ஆகியோரின் சன்னிதிகளும் காணப்படுகின்றன.

இப்பிரகாரத்தின் வடபுறத்திலுள்ள கோபுரத்தின் பக்கத்தில் குழந்தை அம்மன் ஆலயம் உள்ளது. இங்கே அம்புஜவல்லித் தாயாரின் தோழிமார்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மூலவர் சன்னிதிக்கு எதிரே புருஷசூக்த மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தில் கலையழகு மிக்க வீரர்கள், குதிரைகள், பட்சிகள் முதலான உருவங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாக உள்ளன. இங்கே புராண வரலாறுகள் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. மண்டபம் ரதம் போல் உருவாக்கப்பட்டுள்ளது. இதைக் கட்டிய நாயக்க மன்னர்களின் சிலைகளும் அவர் குடும்பத்தினரின் சிலைகளும் அமைந்துள்ளன.

உடையார்பாளையம் ஜமீன்தார்களால் இக்கோவில் பராமரிப்பு செய்யப்பட்டு வந்த ஒரு காலத்தில் கோவில் பிரகாரத்தின் வடபுறம் மண்டபம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது உடையார் மண்டபம் என்று வழங்கப்படுகிறது. இது சுவாமி அலங்கார மண்டபமாகப் பயன்படுகிறது. இங்கு வேலைப்பாடுமிக்க கண்ணாடி அறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் பெருமாளும் தாயாரும் விசேஷ உற்சவ காலங்களில் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருவார்கள்.

துவஜஸ்தம்பத்திற்கு மேற்கிலும் மேல் கோபுரவாசலுக்கு கிழக்கிலும் நூற்றுக்கால் மண்டபம் அமைந்துள்ளது. இதன் தென்புறம் நம்மாழ்வார் சன்னிதி இருக்கிறது.

ஸ்ரீ பூவராககசுவாமி சன்னிதிக்கு எதிரில் வடமேற்குப் பகுதியில் உள்ள நந்தவனத்தின் மத்தியில் ராமர் சன்னிதி இருக்கிறது. இங்கே ராமபிரான், சீதை, லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், ஆஞ்சனேயர் ஆகியோர் பட்டாபிஷேகத் திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர். மத்ஸ்ய கூர்ம மூர்த்திகளும் இங்கே இடம் பெற்றிருக்கின்றனர்.

கோவிலின் வடபுறத்தில் அமைந்துள்ள கோபுரவாசலுக்கு வைகுண்ட வாசல் என்று பெயர். வைகுண்ட ஏகாதசி அன்று இது திறக்கப்படும்.

ஸ்ரீ பூவராக சுவாமி சன்னிதிக்கு எதிரில் உள்ள சன்னிதி வீதியில் மேற் கோடியில் ஆஞ்னேயர் சன்னிதி உள்ளது. இதற்கு திருவடி கோவில் என்று மற்ெருரு பெயர் உண்டு. வீதி உற்சவங்களின்போது ஸ்ரீயக்ஞவராகன் இக்கோவிலுக்கு எழுந்தருளுவார்.

நித்ய புஷ்கரணியின் கீழ்புறக்கரையில் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் சன்னிதி அமைந்துள்ளது. ஹிரண்யாக்ஷனை வதம் செய்த ஸ்ரீ பூவராகப் பெருமான் உக்கிர சொருபத்துடன் விளங்கினுர். அதைக் கண்ட தேவர்கள் பெருமான் சாந்தராவதற்கு பூதேவியை வேண்ட, பூதேவி வராகப் பெருமானை பிரார்த்திக்க, ஸ்ரீ வராகப் பெருமானும் பூதேவியுடன் கூடி சாந்தராக லக்ஷ்மீ வராகனுகக் காட்சி தருகின்ருர் என்று புராணம் கூறும். இச் சன்னிதியில் தொன்றுதொட்டு வேதபாராயணம் செய்யப்பட்டு வருகிறது

நித்யபுஷ்கரணி வராகப் பெருமான் பூமியை கடலின் அடியிலிருந்து மேலே கொண்டு வந்த சிரமத்தில் அவன் திருமேனியில்

மேஷராசியில் சூரியன் இருக்கின்ற போது உச்சிவேளையில், மக்கள் வெவ்வேறு தீர்த்தங்களில் மூழ்கும் போது கழிகின்ற பாபங்களை எல்லாம் சுமந்து கொண்டு செல்லும் தீர்த்தங்கள் இப்புஷ்கரணியில் வந்து சேர்ந்து புனிதமாகின்றன என்பது ஐதிகம். இத்தகைய தீர்த்தத்தில் முன்பு ஒரு காலத்தில் குத்ச முனிவரின் புத்திரனைக் கொன்ற ஹேஹ-யநாட்டு மன்னன் இப்புஷ்கரணியில் நீராடி அக் கொடிய பாபத்தினின்-றும் விடுபட்டான் என்று கூறுகிறது நாரத புராணம். ஆகவே மாசிமாதம் பௌர்ணமியன்று உச்சி வேளையில் இத்தீர்த்தத்தில் நீராடு-வோர் எல்லா பாபங்களினின்றும் விடுபடுவர், விஷ்ணுவின் பரமபதத்-தையும் அடைவர். நித்பர்களான பூதேவியும் வராகப்பெருமானும் இங்கே நித்ய வாசம் செய்வதால் இத்தீர்த்தத்திற்கு நித்ய புஷ்கரணி என்ற பெயர் அமைவதாயிற்று. கங்கை முதலான பதினாறு தீர்த்தங்-கள் தீவிர தவம் புரிந்து பெருமானுக்கும் பூதேவி பிராட்டியாருக்கும் அன்ன பான ஸ்நானாதிகளுக்கு உபயோகமாகும் பொருட்டு என்றும் இப்புஷ்கரணியில் வசிப்பதாகப் புராணம் கூறும். பகவானின் திருவடி கட்டைவிரல் சம்பந்தத்தினாலேயே கங்கைநதிக்கு மிகுந்த புனிதத்தன்மை ஏற்படுமெனில், புஷ்கரணியில் பூதேவியும் வராகப் பெருமானும் துளைந்து நீராடியதால் சர்வாங்க சம்பந்தம் பெற்ற இப்புஷ்கரணியின் புனிதத் தன்மையைக் கூறவும் வேண்டுமா ?

கடலினின்றும் பூமியை மேலே கொண்டுவந்த வராகப்பெருமான் சகல உயிர் வருக்கங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்ததனாலே தானும் பேரானந்தம் அடைந்தான். ஆனந்தக்கண்ணீர் வெளிப்பட்டது. எல்லோருக்கும் ஆனந்தம் விளைவித்த அந்த இடத்திற்கு ஆனந்த-பவனம் என்று பெயர். வங்கக் கடலுக்கு மேற்கே புண்டரீகம் (தில்லை?) என்றொரு ஸ்தலம் இருக்கிறது. அதற்கும் மேற்கே காவேரிக்கும் வடக்கே விருத்தாசலத்திற்கு தீமூலையிலே வெள்ளாற்றிற்கு தெற்கே ஆனந்த பவனம் என்ற இடம் உள்ளதாக நாரதபுராணம் கூறும்.

ஹிரண்யாக்ஷனுக்கு ஜில்லிகா என்பவள் புதல்வி. அவள் விஷ்ணு-பக்தி கொண்டவள். கடுந்தவம் புரிந்தாள். காலக்கிரமத்தில் தண்டகன் என்ற புதல்வன் பிறந்தான். அவன் தாயின் கருவிலிருக்கும்போது

நாரதரிடம் உபதேசம் பெற்றவன். எனினும் தாயாதியர்களான அசுரர்களுக்காக அன்னையின் ஆணையின் பேரில் தேவர்களோடு போர் புரிந்தான். போரில் ஆற்ருத தேவர்கள் வராகப்பெருமானிடம் விண்ணப் பிக்க சுவேத வராகப்பெருமான் தன் மூச்சுக்காற்றினுலேயே அவனைக் கொன்ருன் ஜில்லிகை யோகத்தினுல் தன் உயிரை ஹரியின் முன்னே போக்கி வைகுண்டத்தை அடைந்தாள். அந்த பக்தையின் பெயரால் அந்த வனம் ஜில்லிகாவனம் என்று பெயர்பெற்றது. ஜில்லிகையும் தண்டகனும் ஹரிசாயுஜ்யம் பெற்றனர்.

ஜில்லிகைக்கு சுக்லா கிருஷ்ணு என்று இரண்டு புதல்வியர் தாயைப் போலவே இவர்களும் எம்பெருமானிடம் பக்திபூண்டு ஒழுகியவர்கள். அவர்கள் பக்தியைப் போற்றி அவ்விருவரும் சுக்லாநதி (வெள்ளாறு), கிருஷ்ணுநதி (மணிமுத்தாநதி) என்ற பெயர்களில் புண்யநதிகளாகப் பெருகி பகவத் பூஜைக்கும் அடியார்கள் நீராடுதற்கும் பயன்பட்டு வருகின்றன.

——o0o——

## அசுவத்த மரம்

இரண்யாக்ஷ அசுரனைக் கொன்று சமுத்திரத்தினின்றும் பூமியை மேலே கொணர்ந்து தேவர்கள் துயரைத் துடைத்து உயிர் வருக்கங்க -ளுக்கு உறைவிடத்தை அளித்த அருஞ் செயலால் பெருமானுடைய கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் துளித்து இரு சொட்டுகள் கீழே விழுந்தன. ஒன்று திருத்துழாயாகவும் மற்றென்று அசுவத்த (அரசு) மரமாகவும் தோன்றின. பிரளயத்திற்குப் பின் பூமி மேலே கொண்டு வரப்பட்ட உடன் முதலில் தோன்றிய இம்மரத்தை ஆதிவிருக்ஷம் என்று அழைப்பார்கள். 'மரங்களுக்குள்ளே நான் அசுவத்தமரமாக இருக்கிறேன்' என்று பகவான் தன்னையே கீதையில் குறிப்பிடுவதன்

மூலம் இதன் பெருமை புலனுகும். கடோபநிஷத்திலும் 'இந்த அசுவத் -தம் சநாதனமானது (பழமையானது) என்று குறிப்பிடப் பெறுவதும், மரங்களுக்குள்ளே 'அரசமரம்' என்ற பெயர் வாய்க்கப் பெற்றிருப்பதுமே இதன் பெருமைக்கு சான்றுகள். 'பன்றியும் ஆமையும் மீனமுமாகிய பாற்கடல் வண்ணன்', 'தீ புவி கால் நீர் விண் பூதமைந்துமாய் நின்ற' பெருமான், அசுவத்தமாயும் விளங்கினுன் என்ற புராணக் கூற்றை காண்கிறேம். இது நித்யபுஷ்கரணியின் தென்கிழக்கு மூலேயில் உள்ளது. இதில் எல்லா தேவர்களும் வசிப்பதாகவும், இது எல்லோருக்கும் நலம் பல பயப்பதாகவும் போற்றப்படுகிறது. பகவான் அசுவத்தத்திற்கு 'நான் எப்படி எல்லோராலும் போற்றப்படுகின்றேனே, போற்றியவர்க -ளுக்கு வரங்களை அருளுகின்றேனே, அப்படியே நீயும் போற் -றப்படுவாய், நீயும் பிறர்க்கு வரங்களை அருள்வாய்' என்று வரத்தைக் கொடுத்தாராம். 'விருக்ஷராஜன்' என்ற பட்டத்தையும் அளித்தார். பூத பிசாசுகளால் துன்புறுத்தப்படுவோரும், மகாரோகங்களால் பீடிக்கப்படு -வோரும், சனி முதலான கிரகங்களால் இன்னல் அடைந்தோரும் அசுவத்த சேவையால் துன்பம் நீங்கி இன்பம் எய்துவர்.

இவ்வசுவத்த மரத்தடியில் அமர்ந்துகொண்டு தேவர்களுக்குப் பெருமான் வேதாத்யயனம் செய்துவைக்கின்ருர். ஆதலின் எம்பெரு -மான் தேவர்கள் ஆகியோரின் சான்னித்யம் இம்மரத்திற்கு உண்டு. இதுபோல் எங்கெல்லாம் அரசமரம் இருக்கின்றதோ அங்கெல்லாம் தெய்வசான்னித்யம் உளவாதலினுலே அவை பூஜிக்கத்தக்கன என்று பகவான் அருளுகின்ருர். ஒருமாதம் இடைவிடாது அரசமரத்தை பூஜித்தால் சத்துருக்கள் நாசம் அடைவார்கள். இதைப் பூசிப்பவர் புத்திரன், பொருள், வித்தை முதலியவற்றைப் பெறுவர். நாள்தோறும் வழிபடுவோர் நூருண்டு வாழ்வர். ஞாயிறுதோறும் மிருத்யுஞ்ஜய -ஹோமம் செய்வோரும் நூருண்டு வாழ்வர். குருவாரத்தில் அன்ன -தானம் செய்வோர் நாடாள்வர். சனிவாரத்திலும் சோமவாரத்திலும் மரத்தில் நூல் சுற்றுவோர் சந்ததி பெறுவர். புருஷசூக்தம் ஓதி வழி -படுவோர் நால்வகை புருஷார்த்தங்களேயும் அடைவர். பொதுவாக அசுவத்த பூஜை முற்பகலில் மட்டுமே செய்தல் வேண்டும். ஸ்ரீமுஷ்ணத்

-தில் உள்ள அசுவத்த விருக்ஷத்திற்கு விதிவிலக்கு. இங்கு எப்போதும் எந்நாளும் வழிபாடு செய்யலாம் ஏனெனில் ஹரி இங்கே நித்யம் எழுந்தருளியிருக்கின்றார். நித்ய புஷ்கரணிக்கரையில் இம்மரத்தடியில் காயத்ரியை ஜபிப்போர் பிரம்மஹத்தி தோஷத்தினின்றும் விடுபடுவர். அதுபோல் இங்கே அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபிப்பவர் முக்தி அடைவர். வராஹ மந்திரத்தை இங்கே லட்சமுறை ஜபிப்போர் சப்தத்வீபங்களுக்கும் அதிபதி ஆவர். அங்கு வீற்றிருந்தருளுகின்ற புருஷோத்தமனை துளசி தளங்களைக்கொண்டு பேராயிரம் சொல்லி பூஜை செய்கின்றவர் ஏழுலகங்களுக்கும் அதிபதியாகி போகங்களைப் பல்லாண்டு துய்த்து இறுதியில் மோட்க்ஷத்தை அடைவர்.

——oOo——

## வளையமாதேவியில் வராகப்பெருமான்

முன்பொரு காலத்தில் காத்யாயன முனிவர் மணிமுத்தா நதிக்கரையில் லக்ஷ்மீதேவியே புத்திரியாகத் தனக்கு அவதரிக்க வேண்டும் என்று கடுந்தவம் புரிந்தார். லக்ஷ்மீதேவி காத்யாயனி என்ற பெயருடன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். அழகுக்கோர் இலக்கணமாக விளங்கிய அவள் திருமணத்திற்கேற்ற பருவம் எய்தினாள். தேவர், கந்தர்வர், கின்னரர், பிரம்மாதியர் ஆகிய பலரும் அவள் கை பிடிக்க முயன்றனர். அனைவரையும் ஒதுக்கித் தள்ளினாள் காத்யாயனீ. தக்க கணவனைப் பெறுவதற்காக மணிமுத்தாநதி தீரத்தில் கடுந்தவம் புரிந்தாள். தூய படிகம் போன்ற மேனியும், எழில் கொழிக்கும் அங்கங்களும், மன்மதனையொத்த அழகும், கோடிசந்திரன் கூடி தோன்றினாற்போல ஆனந்தத்தைப் பரப்பும் உருவம் கொண்ட கல்யாணகுண சாகரமாக வராகப் பெருமான் காட்சிதந்தார். காத்யாயனி தேவி பெருமானிடம் தன் தோழியை அனுப்பி தங்கள் ஆசிரமத்தில் விருந்துண்ணுமாறு அழைப்பு விடுத்தாள். வராகப்பெருமான், தான் காட்டில் வசிக்கும் வேடன் என்றும்

நாட்டு உணவு பிடிக்காது என்றும் சொல்லி மறைந்துவிட்டார். ஏமாற்றமடைந்த காத்யாயனி ஒரு துணியில் அவர் உருவத்தை வரைந்து அடிபணிந்தாள். கண்ணீர் பெருக்கினுள். பெருமானும் அவள் பக்தியை மேலும் சோதிக்க எண்ணி பிரமனை அனுப்பினுர்; பிரமனும் அன்ன உருவில் சென்று காத்யாயனியை நோக்கி, 'நீ விரும்புகிற அந்த வராகனுக்கு குலம் கோத்ரம் கிடையாது, வித்தை அவனுக்கு அப்பாற்பட்டது, ஏழைகளோடு இருப்பவன், நல்ல உணவுகூட கொள்ளமாட்டான். அவனை ஏன் விரும்புகிறுய்?' என்று கேட்டது. இதைக் கேள்வியுற்ற காத்யாயனி சினந்து லோகோத்கிருஷ்ட குண-சாலியையா பழிக்கின்றீர். உம்மோடு பேசுவதற்கே யோக்யதை இல்லை' என்று கூறி வெளியேறினுள். காத்யாயனியின் பக்தியின் உறைப்பினுல் உள்ளம் பூரித்த பகவான் அங்கே தோன்றினுர். காத்யாயனர். பெருமானுடைய அடியில் வீழ்ந்தார், துதித்தார். தன் குமாரியாகிய, காத்யாயனியை அவரிடம் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினுர். தேவர்கள் முன்னிலையில் அங்கேயே திருமணம் நடந்தேறியது. காத்யாயனரின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்வாசிரமத்திலேயே காத்யாயனரோடு சில காலம் வசித்தார். திருமணத்தின்போது சூரியபகவான் காத்யாயனி தேவிக்கு வளையல்கள் அளித்ததால் அவ்விடத்திற்கு வளையமாதேவி என்ற பெயர் வழங்கலாயிற்று. அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க பெருமான் வராகரூபத்தை விடுத்து சுத்தரரூபம் தாங்கி வேதநாராய-ணன் என்ற பெயரில் அவ்வூரில் காட்சிதருகிருர். காத்யாயன முனிவர் தான் தவம் சைய்வதற்கு உதவும் வகையில் தோண்டிய திருக்குளத்-திற்கு வாயுமூலையில் கோவிலைக் கட்டினுர். அங்கே காத்யாயினி தேவியும் அம்புஜவல்லி என்ற பெயரில் காட்சிதந்தருளி வருகிருள் ஸ்ரீமுஷ்ணத்திற்கு சில மைல் தூரத்திலுள்ள வளையமாதேவியில் வேத-நாராயணப் பெருமானுக்கு ஆண்டுதோறும் பத்துநாள் உத்சவம் நடை பெறுகிறது. கடைசி நாளன்று திருக்குளத்தில் தீர்த்தவாரி நடை பெறுகிறது.

—o0o—

## 23

# உத்சவங்கள்

'உத்சவம்' என்ற சொல்லுக்கு 'மகிழ்ச்சி உண்டாக்குதல்' என்று பொருள். உத்சவ காலங்களில் கோவில் மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகம், திருவாபரணம் பூட்டுதல், கலையழகு மிளிர அலங்காரம் செய்தல், வீதிஉலா புறப்பாடு, பல்வேறு வாகனங்களில் எழுந்தருளல், வேத திவ்வியப் பிரபந்தங்கள் ஓதுதல், மேளதாளங்கள் ஒலித்தல், கதாகாலக்ஷேபங்கள் ஏற்படுத்துதல் முதலானவை புறஉலக வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கும் மக்களின் பொறிப் புலன்களை இறைவனோடு சம்பந்தப்படுத்தி நற்கதியில் செலுத்துவதற்கு முன்னோரால் ஏற்படுத்தப்பட்டவை.

ஸ்ரீ பூவராககசுவாமி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தில் ஆண்டுதோறும் இரண்டு மாத்சவங்கள் நடைபெறுகின்றன. ஒன்று மாசிமாதம் பரணியில் தொடங்கி பூசம் வரையில் ஏழு நாட்கள் ஸ்ரீமுஷ்ணத்தில் நடந்து எட்டாம் நாள் பெருமாத்தூர் கிராமத்தில் பெருமான் எழுந்தருளி ஒன்பதாம் நாள் மகத்தன்று வங்கக் கடலில் கிள்ளையில் தீர்த்தம் தந்து மறுநாள் முதல் வாழ்கை, லால்புரம், சிதம்பரம், மேலமூங்கிலடி, புவனகிரி, ஆலம்பாடி, தேத்தாம்பட்டு, ராமாபுரம், கவரைப்பாளையம் ஆகிய கிராமங்களில் பதினைந்து நாட்கள் உத்சவங்கள் நிகழ்த்தப்பெற்று பிறகு பெருமான் ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளியவுடன் உத்சவம் முடிகிறது. இது மாசிமகப் பிரம்மோத்சவம் எனப்படுகிறது. இந்த உத்சவத்தில் சமுத்திரத்திற்கு எழுந்தருளும் முன் தைக்கால் கிராமத்தில் ஓர் நவாப் அடக்கம் செய்யப்பட்ட மசூதி வழியாக பெருமாள் எழுந்தருளுவதும், மசூதி மேட்டில் மேள தாளங்களுடன் பூசையை ஏற்றுக்கொள்வதும், நவாப்பின் அரண்மனைவரையில் எழுந்தருளுவதும் ஒரு சிறப்பு.

இரண்டாவது பிரம்மோத்சவம் சித்திரை மாதத்தில் ஸ்ரீமுஷ்ணத்-

திலேயே நடைபெறுவது. ஒன்பது நாட்கள் பகல் இரவு பெருமாள் வீதிக்கு எழுந்தருளுகிறார். ஒன்பதாவது நாள் மட்டையடி உத்சவம் விசேஷமானது. சித்ராபௌர்ணமியாகிற அன்று நண்பகலுக்குமேல் நித்ய புஷ்கரணியில் தீர்த்தவாரி.

ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு ஏகாதசிகள், பௌர்ணமி, அமாவாசை. மாதப்பிறப்பு இந்த நாட்களில் போக நாராயணசுவாமி பிரகாரத்தில் எழுந்தருளுகிறார்.

வெள்ளிக்கிழமை தோறும் அம்புஜவல்லித்தாயார் டோலோத்-சவம்.

அவதார தினமாகிற சித்திரைமாத ரேவதியில் பூவராகன் எழுந்தருளுகிறார்.

வைகாசி விசாகம்—உத்சவர் கருடவாகனம்

ஆடிப்பூரம்—ஆண்டாள் உத்சவம்

ஆவணி—பத்துநாள் ஸ்ரீஜயந்தி, உரியடி

புரட்டாசி—பெருமாள் தாயார் நவராத்ரி கொலு

ஐப்பசி—தீபாவளி உற்சவம்

கார்த்திகை—திருக்கார்த்திகை சொக்கபானை

மார்கழி—பகல் பத்து அத்யயன உற்சவம் இராப்பத்து ஆண்டாள் நீராட்டு

வைகுண்ட ஏகாதசி—யக்ஞவராகன் வீதி உற்சவம் கருடசேவை

தை சங்கிராந்தி—யக்ஞவராகனுக்கும் ஆண்டாளுக்கும் திருக்கல்யாணம்

மாட்டுப் பொங்கல்—பாரிவேட்டை

தைப்பூசம்—குணமங்கலத்தில் வெள்ளாற்றில் தீர்த்தம் உற்சவம்

பங்குனி உத்திரம்—பெருமாள் தாயார் திருக்கல்யாணம், மறுநாள்
பூண்டியில் வெள்ளாற்றில் தீர்த்தம்,
திரு ஊரல் உத்சவம்

அக்ஷய திருதியை – கருடசேவை

——o0o——

## கோவில் கல்வெட்டுக்கள் முதலியவற்றினின்றும் அறியப்படும் செய்திகள்

1916-ஆம் ஆண்டு செயிண்ட ஜார்ஜ் கோட்டை கெசட் 29—8—1916 தேதியிடப்பட்ட 99ஆம் எண் 89, 90, 91, பக்கங்களில் Home Miscellaneous என்ற பிரிவின் கீழ் கோவில் மதில்களிலும் சன்னிதிகளிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் கல்வெட்டுக்கள் 256 முதல் 273 வரையுள்ளவை கெசட் இரண்டாம் பிரிவில் 147ஆம் பக்கம் பாரா 73இல் அனுபந்தம் Cஇல் உள்ளன என்றும் திரு R. ஸ்ரீனிவாஸராகவாச்சாரியார் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ண மாஹாத்ம்யம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கண்டுள்ள விபரங்கள் கீழ்வருவன.

256, 257. திருமதில் விஜயப்ப கிருஷ்ணப்ப நாயக்கரின் குமாரர் கொண்டப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. இதுமுதல் பிராகாரத் தென் மதிலில் சக ஆண்டு 1504இல் பொறிக்கப்பட்டது.

258. பள்ளிகொண்ட பட்டணம் சீமா, குறிஞ்சிப்பட்டு மதுராவில் தமக்கு அக்ரகாரமாக அளிக்கப்பட்ட சில்லாராம்பூர் கிராமம், ஆதிவராக

சுவாமிக்கு அவசரம் கொண்டப்பாவால் அளிக்கப்பட்டது. இது சக வருடம் 1514இல் பொறிக்கப்பட்டது.

259. வேங்கடப்ப நாராயண அய்யனுரு என்பவரால் ராயசம் அன்னையாவிற்கு அரசூரில் உள்ள நிலங்கள் சில கொடுக்கப்பட்டன. அவை ஆதிவராஹமூர்த்தி சன்னிதியில் ததியாராதனை பொருட்டு தானமாக வழங்கப்பட்டன. இது சக ஆண்டு 1603 வைகாசி 15இல் பொறிக்கப்பட்டது.

260. கிருஷ்ணப்ப நாயக்கரின் ஏஜண்டான வேங்கடராசு கொண்டய்யா என்பவரால் எணமங்கலம் கிராமத்தில் சுவாமி கைங்கர்யம் செய்யும் கோவில் சிப்பந்திகளுக்கு நிலம் அளிக்கப்பட்டது. 1522 சக ஆண்டு, பங்குனி 10இல் பொறிக்கப்பட்டது.

261. விருஷாதராமன் என்பவர் கடுந்தவம் புரிந்து ஆதிவராஹ சுவாமியிடமிருந்து சங்கு சக்ரம் பெற்றதாக பிராகாரத்தின் கிழக்கு மதிலில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் கல்வெட்டு கூறுகிறது.

262. ஆதிவராகப் பெருமானுக்கு விசேஷ பூஜைக்காகவும் கோவில் பழுதுபார்ப்பதற்காகவும் வையப்பகொண்டப்ப நாயக்கர் பெயரால் காளாஞ்சி மல்லப்ப நாயக்கரால் ஆதிவராஹநல்லூர், கொண்டசமுத்ரம், சோழவளநாட்டு ராஜாதிராஜ வளநாட்டின் பகுதியாகிற வன்னியர் நாட்டுக்குட்பட்ட வேலுடையாம்பட்டுச் சாவடியைச் சார்ந்த அறந்தாங்கி ஆகிய ஊர்கள் தானமாக வழங்கப்பட்டன. இது சக 1508 விஜய ஆண்டு துலாமாதம் 12ஆம் நாள் பொறிக்கப்பட்டது.

263, 264. ஆதிவராகப் பெருமானுக்கு நிவேதனம், விளக்கு, நந்தவனப் பராமரிப்பு ஆகியவற்றிற்காக புவனகிரி பட்டிணம் ஆலம்பாடி பரப்பைச்சேர்ந்த சன்னநத்தம், கீளுடையாநத்தம் கிராமங்கள் கொண்டப்ப நாயக்கரின் ஊழியரான ராயசம் வேங்கட ஐயர் என்பவ-

ரால் அளிக்கப்பட்டவை. இவை சக ஆண்டு 1504, 1505இல் பொறிக்கப்பட்டவை.

265. பெருமாள் திருமஞ்சனம், நிவேதனம், விளக்கு, நந்த-வனம் பராமரிப்பு ஆகியவற்றிற்கு மேற்படி ராயசம் வேங்கட ஐயர் என்பவரால் குறிஞ்சி பரப்பைச் சார்ந்த பெலாந்துரை கிராமம் அளிக்கப்-பட்டது. இது சக 1504இல் பொறிக்கப்பட்டது.

266. அச்சுதப்ப நாயக்கரின் உத்தரவின்பேரில் கிருஷ்ணப்ப நாயக்கர் மகன் கொண்டப்ப நாயக்கரால் புவனகிரி சீமையில் கோவி-லுக்குச் சொந்தமான 38 கிராமங்களின் வரிகள் கோவிலுக்காக வஜா செய்யப்பட்டன. இதே கல்வெட்டில் கோபுரம், பிரகாரம், மண்டபம் கட்டவும், ஆபரணங்கள் செய்யவும், குளங்கள் தோண்டவும் சில கிராமங்கள் அளிக்கப்பட்டன என்ற செய்தி காணப்படுகிறது. இது சக ஆண்டு 1504இல் பொறிக்கப்பட்டது.

267. வராஹ புராணத்தினுள் ஸ்ரீமுஷ்ண மாகாத்ம்யத்திலுள்ள-வாறு 12-மாதங்களிலும் நடத்தப்பெறும் உத்சவங்களும் அவற்றின் பலன்களும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு உத்சவத்திலும் பெருமாள் உலாவருதற்குரிய வாஹனங்களும், நிவேதனம் ஆகியவை-களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

268. ஏகாம்பரகச்சிராயர் என்பவரால் ஒரு மண்டபம் கட்டப்-பட்ட செய்தி இதில் கண்டிருக்கிறது. சக ஆண்டு 1355இல் பொறிக்கப்பட்டது.

269. ரங்க ராவுத்த முந்தர் மல்லிகார்ஜுன கச்சிராயரால் கோவிலுக்கு நிலதானம் செய்யப்பட்டது. சக 1393-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது.

270. உதயகிரி பாப்பய்ய நாயக்கன் புத்திரனும் திம்ம நாயக்கன் பேரனுமான அச்சுதப்ப நாயக்கன் 1505-ஆம் சகாப்தத்தில் பெருமாள் கோவிலில் தனியே நாச்சியார் சன்னிதியை எற்படுத்தினுர். தன்னுடைய நயங்கர ஜில்லாவில் 6-கிராமங்களும் அண்டையிலுள்ள 6-கிராமங்களையும் கோவிலுக்கு அளித்ததுடன் இரண்டு அக்ரகாரங்களையும் ஏற்படுத்தினுர். இவையன்றி 28-கிராமங்களில் ஜோடி, விரஜா, காணிக்கை தலாரிக்கை ஆகியவற்றை தள்ளுபடி செய்தார். தன் சொந்த செலவில் பல நிலங்களைக் கோவிலுக்குத் திரும்பப் பெற்றிருக்கிறுர். காடுதிருத்தி சாகுபடிக்கு யோக்யமாகச் செய்ததுடன், நீர்ப்பாசன வாய்க்கால்கள் வெட்டி குளங்கள் தோண்டி தோப்புக்களை உண்டாக்கியிருக்கிறுர். பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் தங்க ஆபரணங்கள், தங்க வாகனங்கள் ஆகியவற்றை அளித்தும் தேர், மதில்கள் ஆகியவற்றை நிர்மாணித்தும் இருக்கிறுர். மதில்களைப் பாதுகாத்தும் மண்டபங்களையும் பிரகார சன்னதிகளையும் நல்ல நிலையில் அமைத்துள்ளார். அழகிய மணவாளர், சூடிக்கொடுத்த நாச்சியார், ஆழ்வார்-கள் ஆகியோரை பிரதிஷ்டை செய்தார். பல்வகை நைவேத்யங்களுக்கும் ஏற்பாடு செய்தார். பெருமாள் சேவைக்கு 12-இசை வாணர்களையும் 360-சிப்பந்திகளையும் நியமித்தார், உத்சவங்கள் அனைத்தும் மீண்டும் நடக்க ஏற்பாடு செய்தார். இவற்றையெல்லாம் கௌரவிக்கும் வகையில் இவரை கோவில் நிர்வாகியாகவும் சம்பிரதியாகவும் இருக்குமாறு கோவில் ஸ்ரீபண்டாரத்தைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள். மேலும் கோவில் சரக்கறைக்கு முத்திரை வைக்கும் உரிமையும், ஸ்ரீமுஷ்ண பட்டணம் அதைச் சார்ந்த ஊர்களின் தலாரிகை பெறும் உரிமையும் கோவிலிலுள்ள பிரதிமைகளையும் பண்டாரத்தையும் பாதுகாக்கும் உரிமையும் அவருக்கு வழங்கப்பட்டன. இக்கல்வெட்டு பெருமாள் சன்னதியின் மேலண்டை மதில் வடக்குப் பாகத்தில் தெலுங்கு மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது.

271. 256, 257, 264-இல் குறிப்பிடப் பட்டுள்ளவை தெலுங்கு மொழியில் பொறிக்கப் பட்டுள்ளன.

272. கொண்டம்ம கிருஷ்ணப்ப நாயக்கரால் பெருமாளுக்கும் அம்புஜவல்லி நாச்சியாருக்கும் தினம் இரண்டு பூமாலைகள் சாத்து-வதற்கான சொத்துக்கள் தானம்.

273. 271-இல் உள்ளது போன்றதே.

—o0o—

## செப்புப் பட்டயம்

1714ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி (சக ஆண்டு 1637) பருக்ஷியார்பாதுஷா டெல்லியில் ஆண்டுகொண்டிருந்தபோது வழங்கப்பட்ட செப்புப் பட்டயம் சென்னை மியூசியத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப்பட்டயத்தில் ஸ்ரீவராகன், ஹனுமான், கருடன் ஆகியோரின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது தெலுங்கு மொழியில் ஒரு பக்கமும் பாரசீக மொழியில் மற்றொரு பக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. டெல்லி பாதுஷாவின் மந்திரியான தோடர்மாலின் சுபேதாராக, கர்ணாடிக் நவாபான சதஉல்லாகான் காலத்தில் திண்டிவனத்தில் வாழ்ந்த சீனிவாசதாசர் என்பவர் அரசாங்க உத்திரவின்பேரில் டெல்லி பாதுஷாவான பருக்ஷியாரின் நன்மையை உத்தேசித்து பரவீடுநாடு செஞ்சி பிராந்தியத்தைச் சேர்ந்த கீழப்-புளியங்குடி, புத்தூர், நெடுஞ்சேரி, மேல்ஐயம்பேட்டை, மேலப்பாலையூர் ஆகிய ஐந்து கிராமங்களையும் ஸ்ரீமுஷ்ணம் ஆதிவராக சுவாமி கோவில் வழிபாட்டிற்கும் உத்சவங்களுக்குமாக தானமாக வழங்கப்பட்டன என்று இப்பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய கல்வெட்டுக்களும் பட்டயமுமின்றி ஸ்ரீவேணுகோ-பாலன் சன்னதி படிக்கட்டில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. அதில் 1773 A. D-ல் உடையார்பாளையம் ஜமீன்தார் கச்சி கல்யாண ரங்கப்ப காளாக்கத் தோளுடையார் என்பவர் ஸ்ரீபூவராக சுவாமிக்கு திருக்-

கல்யாணம் கட்டுவித்து, பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஜமீனைச் சேர்ந்த நான்கு கிராமங்களை தானம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த தேவஸ்தானத்திற்கு அவர்களே அதிபதி என்றும் கூறப்பட்டி-ருக்கிறது.

1958-இல் ஸ்ரீபூவராக சுவாமி கர்ப்பகிருஹ விமானம் சப்ராராணி அவர்களால் புதுப்பிக்கப்பட்ட செய்தி மற்றொரு சிலாசாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதேசிகன் சன்னதியில் புஷ்கரம் மகனிராம் சேட் அவர்களால் திருப்பணி கைங்கர்யம் செய்யப்பட்ட விவரம் மற்றொரு சிலாசாசனத்-தில் கண்டுள்ளது.

பெருமாள் பிரும்மோத்ஸவயாண்டம் என்கிற உடையார் மண்ட-பத்தில் 1950-ல் கண்ணாடித் திருப்பள்ளி அறை நிர்மாணிக்கப்பட்டதை சிலாசாசனம் தெரிவிக்கிறது.

ஸ்ரீமந் மணவாள மாமுனிகளின் 601-வது திருஅவதார மஹோத்-ஸவத்தை முன்னிட்டு திருமங்கை ஆழ்வார் சன்னதி ஸ்ரீமந் மணவாள மாமுனிகள் சன்னதி விமானத்துடன் கூடிய திரு கச்சியப்பர் சன்னதி இவைகள் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமந் மணவாள மாமுனிகள் கைங்கர்ய அபிவர்த்தினி ஸபையாரால் புதுப்பிக்கப்பட்டு மஹாசப்புரோக்ஷணம் நடந்த வரலாறு சிலாசாசனம் மூலம் அறிகிறோம்.

—o0o—

# ஆலய கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| பெருமாள் தாயார் அர்ச்சனை சீட்டு | ... ரூ. | 2-00 |
| சகஸ்ரநாம அர்ச்சனை : | | |
| தாயார் | ... ரூ. | 2-00 |
| பெருமாள் | ... ரூ. | 2-00 |
| திருமஞ்சனம் : | | |
| பெருமாள்-மூலவர், தாயார்-மூலவர் உள்பட | ... ரூ. | 5-00 |
| பெருமாள் உற்சவர் உபயநாச்சியார் | ... ரூ. | 10-00 |
| தனிக்கோவில் நாச்சியார் | ... ரூ. | 3-00 |
| மற்ற சன்னதிகள் ஒவ்வொருவருக்கும் | ... ரூ. | 1-00 |
| அஸ்வத்த பிரதக்ஷிணம் அர்ச்சனை சீட்டு | ... ரூ. | 1-00 |
| காணிக்கைகள் : | | |
| சந்தானகிருஷ்ணன் மடியில் ஏல செய்வதற்கு | ... ரூ. | 12-00 |
| வாகன பூஜைகளுக்கு | ... ரூ. | 10-00 |
| கண்ணாடி அறை பார்வையிட நபர் 1-க்கு | ... ரூ. | 0-50 |
| தங்கத்தோணிக்கினியான் புறப்பாட்டிற்கு | ... ரூ. | 10-00 |
| வாகனங்கள் புறப்பாட்டிற்கு | ... ரூ. | 50-00 |
| திருபரிவட்டம் திருவாபரணம் மதிப்பீடு ரூ. 100- வரை | ... ரூ. | 5-00 |
| ரூ. 100-க்குமேல் மதிப்பீடு | ... ரூ. | 10-00 |

விலை ரூ. 11-00